# ஆடி மகிழ்வோம்



796
அருளா
CH/LIB
SL/PR

ச. அருளானந்தம்

# ஆடி மகிழ்வோம்

## - விளையாட்டு வழிக் கல்வி -

## - Playway Education -

*ச. அருளானந்தம்*

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | ஆடி மகிழ்வோம் |
| நூல் வகை | - | சிறுவர் இலக்கியம் |
| ஆசிரியர் | - | ச. அருளானந்தம் |
| உரிமை | - | ஆசிரியருக்கு |
| படங்கள் | - | ச.அ. அருள்பாஸ்கரன் |
| பதிப்பகம் | - | பதிப்பகத் திணைக்களம், வ.கி.மா., திருகோணமலை. |
| முதற்பதிப்பு | - | 27 - 04 - 2001 |
| பக்கம் | - | 36 + vi |
| விலை | - | 75/- |
| வெளியீடு | - | அருள் வெளியீட்டகம் 37/7, மத்திய வீதி, திருகோணமலை. தொலைபேசி 026 - 21507 |
| நூலாக்கம் | - | பேசும் பேனா பப்ளிக்கேஷன், 38/4, சிவானந்தா வீதி, கொழும்பு - 13. |


**படையல்**

நாற்று மேடையில் தலை நிமிர்ந்து எழுந்து வளரும்
முளை போன்ற சிறுவர்களுக்கு


*விநியோகஸ்தர்:*

**லங்கா புத்தகசாலை**

F.L. 1/14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12.
தொலைபேசி இல. 01-341942, 459431


# உள்ளடக்கம்


- அணிந்துரை
- முன்னுரை
- கவனத்திற் கொள்ளவேண்டியவை
- பனிச்சறுக்கல்
- மோட்டார் சைக்கிள்
- பஸ்வண்டி
- பெட்டிக்குள் பந்து
- மீன் பிடிப்போம்
- சுறாப் பிடிப்போம்
- குழிக்குள் காய் உருட்டல்
- மலை உச்சிக்கு ...
- நெற்றியில் பந்து
- பெரிய மீனும் சின்ன மீனும்
- சோடிப் பொருத்தம்
- கடந்து செல்லுதல்
- காற்று மரங்களை ஆட்டுதல்
- கண்ணாரே கடையாரே
- பந்தால் எறிவோம்
- எழுத்து வேட்டை
- அரசர் சொல்கிறார்
- ஆடும் வீடும்
- நண்டு நடை
- புயல் வீசுகிறது
- நீர் இறைத்தல்
- முன்னும் பின்னும் நடத்தல்
- தலைவனைப் பின்பற்றல்
- கண்கட்டி வித்தை
- கைமரம்
- தடை தாண்டல்
- சிலந்தியும் தேனீயும்
- மந்திரக் கோல்
- செட்டியார் வீட்டுக் கல்யாணம்
- காட்டில் யானை

# அணிந்துரை

ஆரம்பக் கல்வியிலும் கனிஷ்ட பாடசாலைக் கல்வியிலும் விளையாட்டு வழிக் கற்கை மிகவும் பிரசித்தி வாய்ந்தது. சமீப காலமாக எங்கள் கல்விச் சீர்திருத்தங்கள் விளையாட்டு வழிக் கல்வியை வலியுறுத்தி வருகின்றன. ஆனாலும் ஆசிரியர்களுக்கு சரியான வழிகாட்டல் இன்னும் கிடைக்கவில்லை. "ஆடி மகிழ்வோம்" அந்த இடைவெளியை நிரப்ப நல்லதொரு முயற்சியாக அமைகிறது.

திரு. அருளானந்தம் அவர்கள் சிறப்பு மிக்கதொரு எழுத்தாளர். சிறுவர் இலக்கியப் படைப்புக்களில் பாண்டித்தியம் மிக்கவர். சிறுவர் கல்வியில் அவருக்கு அனுபவம் அதிகம். வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிறுவர் கல்விப் பிரிவின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் காலகட்டத்தில் அக்கல்விக்கென ஒரு கைந்நூலையும் தயாரித்தவர். கனிஷ்ட பாடசாலைகளுக்கு முந்திய பாடசாலை ஆசிரியர்கள் விளையாட்டு வழிக் கல்வியை செம்மையாகச் செய்வதற்கு உதவும் நல்லெண்ணத்தில் அவர் இந்த "ஆடி மகிழ்வோம்" நூலினை ஆக்கியுள்ளார்.

ஆசிரிய உலகம் இவ்வகை நூல்களை வாங்கி வகுப்புக்களில் பயன்படுத்தி கற்றலை மகிழ்ச்சிகரமானதாக மாற்ற வேண்டும். விளையாட்டு வழிக்கல்வி பிள்ளைகளின் மனதில் இலகுவில் பதியும். விளையாடிக் கற்றலில் ஈடுபட்ட பிள்ளைகள் முன்வருவர். இடைவிலகல் குறையும்.

"ஆடி மகிழ்வோம்" நூலில் முப்பது சிறுகதை விளையாட்டுக்கள் உண்டு. ஆரம்பத்தில் ஒவ்வொரு விளையாட்டும் எப்படிச் செய்யப்பட வேண்டும் என்பது விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் விளையாட்டுக்களால் ஏற்பட்டுள்ள நற்பலன்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்த விளையாட்டுக்களைப் பயின்று கொள்ளும் ஆசிரியர்கள் அவர்களும் பின்னர் தாங்களாகவே வேறு விளையாட்டுக்களை ஆக்கி கற்பிக்க முடியும்.

"ஆடி மகிழ்வோம்" ஒரு புதிய முயற்சி. நல்ல முயற்சி. இந்நூலிற்கு அணிந்துரை வழங்குமாறு திரு. அருளானந்தம் அவர்கள் கேட்டுக்கொண்டதை நான் பெருமதிப்பாகக் கொள்கிறேன். அவர் பல்லாண்டு வாழ்ந்து இப்படி இன்னும் பல நூல்களை ஆக்கவேண்டும். அவற்றைக் கல்வி உலகம் வாங்கிப் பயனடைய வேண்டும். என்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

க. நடராசா
செயற்றிட்டப் பணிப்பாளர்.

GTZ/T.I.P./N.E.P.

# முன்னுரை

கல்வி இன்று நமது சிறார்களுக்குப் பெரும் சுமையாகிவிட்டது. பாடங்கள் இறுகிக் கொண்டு வருகின்றன. பாடசாலைகளுக்குச் செல்வது பிள்ளைகளுக்குத் தொல்லையாகிவிட்டது. கற்றலைவிட்டு ஓட முற்படுகின்றனர். பாடசாலைகளில் பாடங்கள் இறுக்கமாகிக் கொண்டு வருவதால் இடைவிலகல் அதிகரிக்கின்றது. இவை யாவற்றையும் மிக இலகு முறையான விளையாட்டுக்கள் ஊடாகச் செயற்படுத்தலாம். விளையாட விரும்பாதவர் உண்டா? மொக்கு, மூளை இல்லாதவர் என்று யாரும் இல்லை. பிள்ளைகள் தனித்தனி ஆற்றல் கொண்டவர்கள். அதனைப் புரிந்து அதற்கேற்ப விளையாட்டுக்கள் மூலம் சகல கற்றல் செயற்பாடுகளையும் நிறைவு செய்து அவர்களது ஆளுமையைக் கட்டி எழுப்பலாம். முன்பள்ளிகளில் இருந்து இச்செயற்பாடுகள் தொடங்கி ஆரம்பக் கல்வி வழியே செல்லுமாயின் புதுமையான சமூக அமைப்பைக் காணலாம். இடைவிலகல் என்பதற்கு இடமே இருக்காது. விளையாடிக் கற்றல் மனதில் இலகுவில் பதிந்து விடும்.

இன்று ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி பற்றி நம் நாட்டில் விழிப்புணர்வு துளிர்விட்டுள்ளது. பல அரச சார்பற்ற நிறுவனங்களும், உள்ளூராட்சி நிறுவனங்களும், தனியாரும் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களான முன்பள்ளிகளை நடத்தி வருகின்றன. பல முன்பள்ளிகளில் கற்பித்தல் செயற்பாடுகள் சுமையாக மாறிவிட்டன. முதலாம் வகுப்புக்கு ஆயத்தம் செய்யும் இடமாக முன்பள்ளிகள் மாறக் கூடாது. என்ற ஆர்வத்தினால் முன்பள்ளிகளில் கவனம் செலுத்த வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா நடவடிக்கையினை மேற்கொண்டார். ஆசிரியர்களுக்கான வழிகாட்டியைத் தயாரிக்கப் பணிப்புரை விடுத்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தோடு இணைந்து முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கி வருவதோடு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. 3 - 5 வயதுச் சிறார்களுக்கு மகிழ்ச்சிகரமான சூழலை உருவாக்கி கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல பலரும் முனைகின்றனர்.

குழந்தைப் பருவம் முழு மனித வளர்ச்சியைப் அடைவதற்கேற்ற வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது. விளையாடுவது பிள்ளைகளின் இயல்பு. விளையாட்டுக்கள் ஊடாகவே பிள்ளைகள் கற்கின்றனர். மகிழ்ச்சியும், துடிதுடிப்பும் ஆராயும் தன்மையும், தொட்டுணர்ந்து புதுமைகாணும் வேட்கை

யும், புதுப்புதுக் கருவூலங்களையும், மனவெழுச்சிகளையும் கலந்து, பரிமாறிச் செயற்படவும் பாதையை வகுத்துள்ளது. விளையாட்டு என்பது வெறும் பொழுதுபோக்கல்ல. விளையாட்டு கற்றல் ஊடகம். வாழ்க்கையின் முதுகெலும்பு, பூரிப்பின் பெட்டகம். ஆகவே முன்பள்ளிகள் விளையாட்டைக் கற்றல் ஊடகமாகக் கொள்ள வேண்டும். நெருக்கீடுகளுக்கு உள்ளான மாணவர்களுக்கும், ஆரம்ப வகுப்பில் பின்தங்கிய எந்த வகுப்பு மாணவர்களுக்கும் இச்செயற்பாடுகள் மிகப் பொருத்தமானவை. தங்கள் பிள்ளைகள் விரைவில் எழுதவும், வாசிக்கவும், கணிதத்தைப் புரிந்து கொள்ளவும் வேண்டும் என்பதையே பெரும்பாலான பெற்றோர்கள் விரும்புகின்றனர். விளக்கமில்லாது நெட்டுருப் பண்ணுவதுதான் கற்றல் என்ற பிரமையில் உள்ளனர். இப்படி விளங்காது விரைவில் எண்ணையும் எழுத்தையும் நெட்டுருப் பண்ணிக் கற்றவர்கள்தான் இடைவிலகலில் முதன்மை நிலையில் உள்ளனர். கல்வி வேலையாக அமையாது விளையாட்டாக அமைந்தால் வாழ்வு மலரும். இதனைக் கருத்தில் கொண்டே இந்நூலை எழுதியுள்ளேன். ஆரம்ப வகுப்புக்களிலும், முன்பள்ளிகளிலும் பரீட்சித்துப் பார்த்த பின்னர்தான் நுலை வெளியிடுகிறேன்.

இங்கு தரப்பட்ட விளையாட்டுக்கள் பலருக்குத் தெரிந்திருக்கும். சிலருக்குத் தெரியாதிருக்கும். இவற்றைப் படித்து இவைபோல் பல விளையாட்டுக்களை நீங்கள் ஆக்க வேண்டும். கற்றல் செயற்பாடுகளை அமைத்து, பிள்ளைகளுக்கு வழங்கும் போது வெற்றிகிட்டும். விளையாட்டு பழையதா, புதியதா என்பது முக்கியமல்ல. அவை பிள்ளைகளுக்கு எந்த அளவுக்கு கற்றல் செயற்பாடுகளுக்குப் பயனுள்ளன என்பதே முக்கியம். இந்த நூல் வெளிவரக் காரணமாக அமைந்தவர்கள் எல்லோருக்கும் இதயத்தால் நன்றி. உங்கள் கற்பித்தல் கற்றற் செயற்பாடுகளுக்கு இந்நூல் பெரிதும் உதவும் என நம்புகின்றேன்.இந்நூலைப் படித்து அணிந்துரை தந்தவர் திரு. கனகசபை நடராசா அவர்கள் சிறந்த கல்விமான். ஆசிரியராக, அதிபராக, மாவட்டக் கல்விப் பணிப்பாளராக, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளராக கல்வி அமைச்சின் பணிப்பாளராக கடமையாற்றியவர். தற்போது ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுழைப்பகத்தின் ஆசிரிய சேவைக்கால பயிற்சிச் செயற்றிட்டப் பணிப்பாளராகப் பணியாற்றுபவர். அவர் என்றும் நன்றிக்குரியவர். படங்களை வரைந்த எனது மகன் அருள்பாஸ்கரன், எழுத்தாக்கம் செய்து தந்த பதிப்பகத் திணைக்கள அலுவலர்கள், அச்சிட்ட பேசும் பேனா பப்பிளிக்கேஷன் அலுவலர்கள் அனைவருக்கும் நன்றி.

**ஆலங்கேணி,**
**கிண்ணியா.**

**ச.அருளானந்தம்.**

# விளையாட்டு வழிக் கல்வி

**ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய தகவல்கள்**

1. விளையாட்டை முழுமையாக அறிந்திருக்க வேண்டும். அத்துடன் எவ்வாறு விளையாட வேண்டும் என்பதைத் திட்டமிட வேண்டும்.
2. விளையாட்டை நடத்த வேண்டிய இடத்தைத் தீர்மானிக்க வேண்டும்.
3. அந்த இடம் விளையாட்டுக்கு பொருத்தமானதாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
4. விளையாடப் போதுமான அளவு பிள்ளைகள் வேண்டும். அதற்கேற்ப குழுக்களாக்க வேண்டும்.
5. நேரத்திற்கேற்ற விளையாட்டைத் தெரிந்தெடுத்தல் வேண்டும்.
6. விளையாடத் தேவையான பொருட்களைச் சேகரித்துக் கொள்ள வேண்டும்.
7. வயதுக்கும் விளையாட்டுக்கும் தொடர்பு இருக்க வேண்டும்.
8. விளையாட்டினால் விளையும் பயனைத் தீர்மானிக்க வேண்டும்.
9. பிள்ளைகளுக்குத் தெளிவாக விளையாட்டைப் பற்றி விளக்க வேண்டும்.
10. விளையாடும் போது நெறிப்படுத்த வேண்டும்.
11. தனது இலக்கை அடைவதற்கேற்ப செயற்பாட்டை ஒழுங்கு செய்தல் வேண்டும்.
12. ஒன்றிணைந்த கற்றல் நிகழ்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

# 1. பனிச்சறுக்கல்

பிள்ளைகளை அழையுங்கள். 5பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு நிறத்தில் 1-5 வரை இலக்கம் எழுதி ஒவ்வொருவரிடமும் தெரியும்படி சட்டையில் குத்திக் கொள்ளச் செய்யுங்கள். இரண்டு கடதாசித் துண்டுகளைக் கொடுங்கள். அவற்றை நிலத்தில் போட்டு, அவற்றின் மேல் நிற்கச் சொல்லுங்கள். ஒவ்வொரு காலுக்குக் கீழும் ஒவ்வொரு கடதாசித்துண்டு இருக்க வேண்டும். அத்துடன் கைகளிலும் கடதாசித் துண்டைக் கொடுத்து நன்கு பிசைந்து கசக்கும்படி பணியுங்கள். சில விதிகளை எடுத்துக் கூற வேண்டும்.

- ✲ கடதாசி கால்களை விட்டு விலகக் கூடாது.
- ✲ கால்களை இழுத்துத் தேய்த்து நடக்க வேண்டும்.
- ✲ கைகளை வீசி அசைந்து சுற்றி வரலாம்.
- ✲ நிறத்தின் அடிப்படையிலும், இலக்க அடிப்படையிலும் கட்டளைகளுக்கு ஏற்ப சேர்ந்து கொள்ள வேண்டும்.

ஆயத்தமாகச் சொல்லுங்கள். ஒரு விசிலை ஊதுங்கள். வகுப்புக் கலகலக்கும். எல்லோரும் சரியாகச் செயற்படமாட்டார்கள். ஆசிரியரின் அனுசரணை, தலையீடு அவசியம். சுற்றிவந்து மேற்பார்வை செய்து உதவ வேண்டும். விளையாட்டின் போது இசையைச் சேர்த்துக் கொள்ளலாம்.

பாடல்:-

*ஆடி ஆடி வருகிறோம்*
*அசைந்து மெல்ல வருகிறோம்*
*பாடிப் பாடி வருகின்றோம்*
*பதுங்கி மெல்ல வருகின்றோம்*

*சோடி சேர்ந்தும் சறுக்குவோம்*
*துணை இல்லாதும் செல்லுவோம்.*
*ஓடி நிறத்தைத் தேடுவோம்*
*ஒன்றாய்ச் சேர்ந்து நகருவோம்*






ஆசிரியர் தாளம் போட்டுப் பாடப் பிள்ளைகளும் சேர்ந்து பாடி விளையாட மகிழ்ச்சியாக இருக்கும்.

**இந்த விளையாட்டால் என்ன நன்மை என்கிறீர்களா?**
**நிறையவே உண்டு.**

1. தசைநார் விருத்தி
2. புலன் விருத்தி ஒன்றித்தல்
3. கடதாசி விலகாதிருக்க விழிப்புணர்வு
4. விளையாட்டின் விதிகளைப் புரிந்து கொள்ளல்.
5. கீழ்ப்படிதல், மொழியாற்றலுடன் இசையுணர்வும், ஏற்படல்
6. மகிழ்ச்சி

எழுத்துக்களை எழுதி ஒவ்வொருவர் சட்டையிலும் பொருத்தி விட வேண்டும். பிள்ளைகள் அசையும் போதே சொல்லை ஆசிரியர் சொல்ல, உரிய சொல்லை உருவாக்கப் பிள்ளைகள் சேருவார்கள். உதாரணம் அம்மா.

கற்றல் விரிவாக்கம்: எழுத்து, சொல், கணிதம், சூழலைப் புரிந்து கொள்ளல், ஆக்கத் திறன் விருத்தி, சமூகமனப்பாங்கு ஆகிய வெற்றுக்கேற்ப செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தலாம்.



# 2.மோட்டார் சைக்கிள் ஓடுவோம்

இந்த விளையாட்டு வகுப்பறையினுள் செய்வதற்கு ஏற்றது. இதற்கு தேவை காய்ந்த பனை மட்டை. பனையில் இருந்து விழுந்த பனையின் அடிமட்டையை பிள்ளைகளின் உயரத்திற்கு அளவாக வெட்டி எடுத்து பிள்ளைகளிடம் கொடுக்க வேண்டும். பனை மட்டையின் அடிமட்டை இரண்டு கைப்பிடியாக இருக்கும். அவற்றை இரு கைகளாலும் பிடித்து அழுத்தித் தள்ள வேண்டும். தள்ளிப் பாருங்கள் மோட்டார் சைக்கிள் ஓடும். முதலில் நீங்கள் செய்து காட்டுங்கள். பின் பிள்ளைகளைச் செய்யச் சொல் லுங்கள். மோட்டார் சைக்கிள் ஓடும் போது "பீப்பீப்" சத்தம் போட்டு ஓடச் சொல்லுங்கள். பாருங்கள் உற்சாகத்தை. விளையாடும் போது ஆசிரியர் உரிய நேரத்தில் தலையிட்டு நெறிப்படுத்த வேண்டும். வீதி ஒழுங்கை இச்செயல் மூலம் செய்யலாம்.

*பாடலும் இசைக்கலாம்*



*பீப் பீப் பீப் பீப் பீப்..........*
*வண்டி வருகுது - வண்டி வருகுது*
*புடு புடு புடு புடு*
*வண்டி வருகுது - சைக்கிள்*
*வண்டி வருகுது - மோட்டார் சைக்கிள்*
*வண்டி வருகுது*
*பாடி ஆடி ஓடிப்பழக*
*வண்டி வருகுது*
*புடுபுடு.... புடுபுடு........புடுபுடு*
*மோட்டார் சைக்கிள் வருகுது*
*பீப்பீப்...... பீப்பீப்...... வழி விடு*
*வழிவிடு........ வழிவிடு........ வழிவிடு*
*பாட்டுப் பாடி ஏறி ஓட வண்டி வருகுது*
*புடுபுடு புடுபுடு புடுபுடு*
*வழிவிடு........ வழிவிடு........ வழிவிடு*

பயன்கள்

மொழியாற்றல், உடல் விருத்தி,தசைநார் விருத்தி,புலன் ஒருங்கிணைப்பு, ஆளுக்காள் ஒத்துழைப்பு, வீதி ஒழுங்கு மனமகிழ்ச்சி.



# 3. பஸ் வண்டி


பிள்ளைகளை அழையுங்கள். இரண்டு மூன்று பேராகக் குழுக் களாக்குங்கள். வகுப்பறையில் அல்லது வெளியில் இந்த விளையாட்டைச் செய்யலாம். தூரத்தூர குழுக்களை நிற்க விடுங்கள். அவர்கள் நிற்குமிடம் பஸ் தரிக்குமிடங்கள். அல்லது ஊர். ஊர்களின் பெயர்களை எழுதி வைக்கலாம்.

நீளமான கயிற்றை எடுத்து இரு நுனிகளையும் முடிந்து கொள்ள வேண்டும். இரண்டு பிள்ளைகளை அழையுங்கள். இருவரையும் கயிற் றினுள் புகுத்தி தொய்வு விழாதபடி இடுப்பு வரை மாட்டி விடுங்கள். இருவரும் ஒரே திசையைப் பார்த்தபடி நிற்க வேண்டும். முன்னால் நிற்பவர் ஓட்டுநர் - சாரதி. பின்னால் நிற்பவர் நடத்துநர் - அதுதான் கொண்டக்டர். ஓட்டுநர் "பீப்பீப்பீப்" என்று சத்தமிட்டு பஸ் வண்டியை ஓட்டுவது போல் நடந்தும் ஓடியும் செல்ல அதற்கு ஏற்றாற் போல் நடத்துநரும் இயங்க வேண்டும்.

நிற்பவர்கள் பஸ் வரும் போது கைகாட்ட வேண்டும்.சாரதி நிற்பாட்ட, பயணிகள் பின்பக்கம் சென்று நடத்துநரிடம் போகும் இடம் சொல்ல வேண் டும். ரிக்கற் பெறவேண்டும்.நடத்துநர் இலைகள்,பேப்பர் வைத்துக் கொள்ள வேண்டும். கிழித்து ஒரு துண்டைக் கொடுத்தால் அதுதான் ரிக்கற் பயணி களும் சிப்பி, பேப்பர்த் துண்டு வைத்துக் கொள்ள வேண்டும். அது தான் காசு.

ரிக்கற் பெற்றதும் கயிற்றுள் நுழைந்து சாரதிக்குப் பினனால் போய் நிற்க வேண்டும். சாரதி ஓடும் போது இவர்களும் ஓட வேண்டும். இவ்வாறு பஸ் நிற்பதும் பயணிகள் ஏறுவதும், இறங்குவதும், ரிக்கெற் பெறுவதுமாக விளையாடத் தொடங்கலாம். பிள்ளைகள் ஊர்களின் பெயர்களைச் சொல்ல் வேண்டும். ரிக்கற் பெறுமதியைச் சொல்ல வேண்டும்.


இவ்விளையாட்டு மகிழ்ச்சி, கூட்டுறவு, ஆளுக்காள் ஒத்துழைப்பு, மொழியாற்றல், கொடுக்கல் வாங்கல், பிரயாண அறிவு, உடல் விருத்தி போன்ற பல விருத்திகளுக்கு இடமளிக்கிறது. எண்ணாற்றலில், கூட்டல், கழித்தல், பணம் பரிமாறல் போன்ற எண்ணக் கருக்களும் விருத்தியுறும்.



# 4. பெட்டிக்குள் பந்தைப் பிடித்தல்

பிள்ளைகளை இருவராகச் சோடி சேருங்கள்.சிறிய பிஸ்கற் வெற்றுப் பெட்டி ஒவ்வொன்றை ஒவ்வொரு சோடியிடம் கொடுங்கள். ஒவ்வொரு பந்தையும் கொடுங்கள். படத்தில் காட்டியது போல் 3 கோடுகள் நிலத்தில் வரையுங்கள். நடுக்கோட்டில் இருந்து மற்றக் கோடுகள் 5 அடி தூரத்தில் இருக்க வேண்டும். ஒரு சோடியை அழைத்து ஒருவர் ஒரு கோட்டிலும் மற்றவரை மறு கோட்டிலும் நிற்க விடுங்கள். நடுக் கோட்டில் பிள்ளைகளின் உயரத்துக்கேற்ப இருதடிகளில் கயிற்றைக் கட்டி விடலாம்.

ஒருவர் கையில் சிறிய வெற்றுப் பெட்டி இருக்கும். மற்றவரிடம் பந்து இருக்கும். பந்தை கோட்டின் கயிற்றுக்கு மேலால் வீச வேண்டும். மற்றவர் பந்தைக் கீழே விழவிடாது பெட்டிக்குள் பிடிக்க வேண்டும். பந்தை 5 முறை வீசலாம். பின்னர் ஆள் மாறலாம்.பந்தை வீசும் போது எண்ணும்படி கூறலாம். பந்துகளில் இலக்கங்களை எழுதிவிடலாம்.



பந்து வீசுபவர்களையும் பெட்டி வைத்திருப்பவர்களையும் கலந்து விட வேண்டும். ஒரு வரிசையில் பந்து வைத்திருப்பவர் நின்றால் அடுத்துப் பெட்டி வைத்திருப்பவர். இப்படி மாறி மாறி இரு வரிசையிலும் நிற்க வேண்டும். கவர்ச்சியாக இருக்கும்.

கற்றல் விரிவாக்கம்:

பந்துகளில் எழுத்துக்களையும் சொற்களையும் எழுதிச் சொல்லாக்கல், வசனமாக்கல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம்.



# 5. மீன் பிடிப்போம்

ஆசிரியர் அட்டையில் பல அளவுகளில் மீன்கள் வரைந்து வெட்டி எடுக்க வேண்டும். மீன்களின் வாய் முனையில் பேப்பர் கிளிப் பொருத்த வேண்டும். மீன்களுக்கு பல நிறங்கள் தீட்டி இருக்க வேண்டும். மீன்களின் பெயர்களையும் எழுதி ஒட்டி விடலாம். பெரிய வட்டமான கோடு வரைந்து அதனுள் மீன்களைப் போட வேண்டும். வட்டமான கோடுதான் கடல்/குளம்.

சிறிய காந்தத் துண்டுகளை எடுத்து நூலில் கட்டி, அந்த நூலின் மறு நுனியை ஒரு தடியில் கட்டி விட வேண்டும். இவ்வாறு பல தடிகள் செய்ய வேண்டும். அதுதான் தூண்டில். பிள்ளைகளை அழைத்து தடியைக் கொடுத்து இத்தூண்டிலால் கடலில்/குளத்தில் மீன் பிடிக்கச் சொல்ல வேண்டும். அவர்களை குளத்தைச் சுற்றி நிற்க வைக்க வேண்டும். அவர்கள் தூண்டிலைப் போடும் போது மீனில் உள்ள கிளிப் காந்தத்தில் ஒட்டிக் கொள்ளும். தூண்டிலோடு மீன் வரும்.


*பாடல்:-*

*நீலக் கடலின் அடியிலே*
*நீந்தும் மீனைப் பிடிக்கலாம்*
*வாளை மீனைப் பிடிக்கலாம்*
*வடிவாய்ப் பொரித்து உண்ணலாம்.*

மீன்களில் மீனின் பெயர்களையும் எழுதிவிட வேண்டும். ஆசிரியர் மீன்களின் நிறத்தைச் சொல்லும்படி பிள்ளைகளைக் கேட்கலாம். மீனின் பெயரைக் கேட்கலாம். விரைவில் நிறங்களையும் மீன்களின் பெயர்களையும் கற்று விடுவார்கள். வாசிக்கவும் பழகி விடுவார்கள்.

*கற்றல் விரிவாக்கல்:*

ஆசிரியர் விரும்பிய மீனின் பெயரைக் கூறி பிடித்து வரச் சொல்லலாம். பாடிக் கொண்டும் மீன் பிடிக்க லாம். பிடித்த மீனைச் சந்தையில் விற்கலாம்.மீனைப் பார்த்து விலைபேசி, பணம் கொடுத்து வாங்கும்படி விளையாட்டுச் சந்தை அமைத்து கற்றலில் ஈடுபடுத்தலாம்.



# 6. சுறாப் பிடிப்போம்


பிள்ளைகளை அழையுங்கள். வட்டம் ஒன்று வரையுங்கள் அதனுள் மரக்குற்றியை வையுங்கள் கயிற்றால் மரக்குற்றியைக் கட்ட வேண்டும். கயிற்றின் நுனி வட்டத்துக்கு வெளியே நீளமாக இருக்க வேண்டும். வரைந்த வட்டம்தான் கடல். மரக்குற்றிதான் சுறாமீன்.

"மீனவன் கடலில் மீன் பிடிக்கும் போது பெரிய சுறா பட்டுவிட்டது. அவனால் இழுக்க முடியாது. நாமும் உதவுவோம்" என்று ஆசிரியர் கதையைக் கூறித் தொடங்க வேண்டும்.

பிள்ளைகள் கயிற்றைப் பிடிப்பார்கள்.

ஏலேலோ ஐலசா ஏலேலோ.......
சுறா....... வருது......... வருது........
இழுங்க........ இழுங்க...........
பெரிய சுறாப் பட்டிருக்கு
இழுங்க...... இழுங்க......
ஏலேலோ........ அயிலசா...... ஏலேலோ
இழுங்க......... இழுங்க.....


சொல்லிச் சொல்லி இழுக்கும் பாவனையில் பிள்ளைகள் செய்ய வேண்டும். ஆசிரியர் சொல்லச்சொல்ல பிள்ளைகளும் சொல்லிச்சொல்லி இழுக்க வேண்டும். மீன் கரைக்கு வந்ததும் கைதட்டி ஆரவாரம் செய்து மகிழலாம். மொழிவிருத்தி, உடல் விருத்தி, பிறருக்கு உதவும் பனப்பாங்கு, கூட்டுறவு, மகிழ்ச்சி, சமூக உணர்வு ஆகியன விருத்தியாகும்.





# 7. குழிகளுள் காய்களை உருட்டல்

பிள்ளைகளை அழையுங்கள். குழுக்களாக்குங்கள். வகுப்பறைக்கு வெளியே நிலத்தில் ஒரு குழியைச் கிண்டுதல் வேண்டும். அக்குழி ஒரு தேங்காய் சிரட்டை அளவாயிருக்கலாம். அக்குழியில் இருந்து 5அடி ஆரை கொண்ட வட்டம் வரைந்து கொள்ளுங்கள். பிள்ளைகளை அழையுங்கள். வட்டமான கோட்டில் நிற்க விடுங்கள். ஒவ்வொரு பிள்ளையிடமும் 5 உருண்டையான காய்களைக் கொடுங்கள். விசில் ஊதியதும் ஒவ்வொரு காயாகக் குழிக்குள் எண்ணி உருட்டி விழச் செய்யவேண்டும். காய் முழுவதும் உருட்டி விட்டபின் மீண்டும் எடுத்து உருட்ட விடலாம். ஒவ்வொரு காயும் குழிக்குள் விழும் போது கைதட்டி ஆரவாரம் செய்ய வேண்டும். வட்டுக் கத்தரிக்காய், ஆமணக்கங்காய், கொய்யாக்காய், களி மண்ணிலும் உருண்டைகள் செய்து காய வைத்து எடுத்துக் கொள்ளலாம்.




விளைபயன்

1. கணித எண்ணக்கரு - இலக்கம் எண்ணுதல்
2. குறியாக உருட்டும் பயிற்சி
3. புலன் ஒருங்கிணைப்பு
4. தசைநார்ப் பயிற்சி

*இந்த விளையாட்டை இப்படியும் செய்யலாம்.*

10 அடி அகலத்தில் இரண்டு கோடுகள் வரைய வேண்டும். மத்தியில் 5அடி தூரத்தில் அளந்து 10 குழிகளைக் கிண்டிவிட வேண்டும். பிள்ளைகளை இரு பிரிவாக்கி இரண்டு கோடுகளிலும் நிற்கவிட்டு காய்களைக் கொடுத்து நேரே இருக்கும் குழிகளுக்குள் எண்ணி உருட்டிவிடச் செய்ய லாம்.



# 8. கோச்சி மலை உச்சிக்குப் போய்த் திரும்புதல்

மலையில் வளைந்து வளைந்துதான் புகைவண்டி செல்லும். கோச்சி புகையிரத நிலையங்களில் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்ல வேண்டும் என்பதை ஆசிரியர் விளக்க வேண்டும். 5 இடங்களில் 3 பேர் வீதம் நிறுத்தி விட வேண்டும். ஒவ்வொரு நிலையத்திலும் ஆட்களை ஏற்றிக் கொள்ள வேண்டும். பெரிய வட்டமாகக் கோச்சி செல்ல வேண்டும். கோச்சி போல் சத்தமிட்டு செல்ல வேண்டும். என்ஜின் தான் முக்கியம்.

*பாடல்*

*சுக்குப் புக்குத் சத்தம் போட்டு*
*கொச்சி வண்டி போகுது*
*திக்கு முக்குத் தாளம் போட்டு*
*சின்னக் கொச்சி ஏறுது*

ஒரு வட்டம் சுற்றியபின் என்ஜின் சற்று விலகி உள்வட்டமெடுத்துச் செல்ல வேண்டும். படிப்படியாக வட்டத்தைச் சுருக்க வேண்டும். 3 வட்டங்கள் வந்ததும். திரும்பிப் பார்த்தால் பல வட்டங்கள் வந்து கொண்டிருக்கும் வட்டங்களுக்கிடையில் போதிய இடைவெளி வேண்டும். உச்சியை அடைந்ததும் இடப்பக்கமாகச் சென்றால், சடுதியாக வலமாகத் திரும்பி நடக்க வேண்டும். என்ஜினைத் தொடர்ந்தே மற்றவர்கள் வர வேண்டும். இறுதியில் தொடங்கியது போலவே வட்டம் வந்து முடிவடையும். செய்து பாருங்கள்.

*விளைதிறன்*

ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு
ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்படுதல்
அறிவாற்றல் விருத்தி
அணிநடை பயிலல்
உடல் தசைநார் விருத்தி
மொழிவிருத்தி
மகிழ்ச்சி





# 9. நெற்றியில் பந்து


பிள்ளைகளை அழையுங்கள். சோடி சேர வையுங்கள். எதிரெதிரே நிற்க விடுங்கள். சிறிய பந்து போன்ற ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். பழைய பேப்பர் தாராளமாகக் கிடைக்கும். அதைக் கசக்கி உருட்டி பந்து போல் செய்து கொள்ளலாம். இருவரை முதலில் அழையுங்கள். எதிரெதிரே நிற்கவிடுங்கள். கைகளைப் பின்னால் கட்டும்படி கூறுங்கள். இருவரையும் குனிந்து இருவர் நெற்றிகளும் முட்டும்படி நிற்கவிடுங்கள். இருவர் நெற்றியின் இடையில் பந்தை வையுங்கள்.

சரி பந்து கிழே விழாதபடி அசையச் சொல்லுங்கள். பாருங்கள் வேடிக்கையை. இவ்வாறே எல்லோரையும் செய்ய விடுங்கள்.

இந்த விளையாட்டின் போது இசை ஒலிக்கச் செய்தால் நன்றாக இருக்கும்.


*இந்த விளையாட்டால் விளையும் பயன்*

அசைவதால் உடல் விருத்தி
புலன் ஒருங்கிணைப்பு
தசைநார் விருத்தி
ஆளுக்காள் ஒத்துப் போதல்
மகிழ்ச்சி



# 10. பெரிய மீனும் சின்ன மீனும்

இந்த விளையாட்டை வகுப்பறையின் உள்ளும் புறமும் செய்யலாம். பிள்ளைகளை இரு பிரிவுகளாகப் பிரியுங்கள். ஒரு பிரிவு பெரிய மீன்கள். மற்றையது சிறிய மீன்கள். இவை கடற்பரப்பில் நீந்தி விளையாடும் படத்தில் உள்ளது போல் கோடு வரைந்து கொள்ளுங்கள்.




இந்த விதிகளை விளக்க வேண்டும்

1. கடல் எல்லைகளைத் தீர்மானித்துக் காட்ட வேண்டும்.
2. பெரிய மீன்கள் ஒரு புறமும், சிறிய மீன்கள் ஒரு புறமும் இருக்க வேண்டும்.
3. கடல் சரிபாதியாகப் பிரிக்கப்பட்டு எல்லைக் கோடுகள் வரையப் பட வேண்டும்.
4. மீன்கள் நீந்தும் போது உடலை நெளித்து, கைகளை அசைத்து நீந்த வேண்டும்
5. இசை தொடங்கியதும் தங்கள் பகுதியை விட்டு வெளியே வர வேண்டும்.
6. இசை விரைவாக ஒலித்தால் விரைவாகவும், மெதுவாக ஒலித் தால் மெதுவாகவும் நீந்த வேண்டும்.
7. இசை ஒலிக்கும் வரை நடு எல்லையைக் கடந்து, மறு எல்லை வரை செல்லலாம்.
8. இசை நிறுத்தப்பட்டதும், தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றுவிட வேண்டும். அதற்கிடையில் பெரிய மீன்கள் சின்ன மீன்களைப் பிடிக்கலாம். பிடிபடாமல் சின்ன மீன்கள் விழிப்பாக இருக்க வேண்டும். பிடிபட்ட சின்ன மீன் பெரிய மீனாகிவிடும்.

ஒலிநாடாப் பெட்டி, வானொலி பயன்படுத்தலாம். இல்லாதவிடத்து ஆசிரியரே இசையை எழுப்பலாம். இசையை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு விரைவாகவும்,மெதுவாகவும் மாற்றிமாற்றி இசைக்கலாம்.உதவிக்குப் பெற்றோர், உதவி ஆசிரியர்,பிள்ளைகளையும் பயன்படுத்தலாம். விளக்கம் கொடுத்த பின் ஆசிரியர் விசிலை ஊதலாம். விளையாட்டுத் தொடங்கிய பின் பாருங் கள், பிள்ளைகளின் ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும்.

*ஏற்படும் பயன்கள்*

*தசைநார் விருத்தி, கிரகித்தல் பயிற்சி, அவதானமாய் இருத்தல், விதிகளைப் புரிந்து கொள்ளல் அதற்கேற்ப ஒழுகுதல், மகிழ்ச்சி,*



# 11. சோடிகளைப் பொருத்துமாக்குதல்

இந்த விளையாட்டுக்குப் பல்வேறு கழிவுப் பொருட்கள் தேவை. இவற்றை சேகரித்து வைப்பது ஆசிரியரின் கடமையாகும்.

போத்தல் மூடிகள், பல்வேறு நீளமுடைய சிறு குச்சுகள், வெற்றுப் பெட்டிகள், பல்வேறு வடிவங்களாக வெட்டியெடுத்த உருவங்கள், பறவை விலங்குகளின் படங்கள், பல்வேறு நிறங்களில் பூக்கள், காய்கள், இலைகள் எழுத்துக்கள், சொல் அட்டைகள், வசனங்கள் போன்றன.

பொருட்களைக் கலந்து குவியலாக்க வேண்டும். விசில் ஊதியதும் ஏதேனும் பொருத்தமான பொருட்களை எடுத்து வரும்படி விளக்க வேண்டும். உதாரணம்:- போத்தல் - அதற்களவான மூடி. பிள்ளை களை ஆயத்தமாகும்படி கூறுங்கள். இப்போது விசிலை ஊதுங்கள். பம்பரமாகச் செயற்படுவார்கள். பிள்ளைகள் சோடி சேர்க்கத் தெரிந்து கொண்டார்களா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். எழுத்துக்களால் சொல் உருவாக்கல், உயரம், பருமன், நிறம் என்ற வகையில் சோடி சேர்க்கலாம். யாவற்றையும் ஆசிரியர் மேற்பார்வை செய்ய வேண்டும்.

*விளைபயன்*

தெரிவு செய்யும் திறனைப் பெறுவர், ஒற்றுமையை அறிவார் கள், வேற்றுமையை அறிவார்கள், கணித எண்ணக் கருவைப் புரிந்து கொள்வார்கள், பொருட்களைத் தொட்டு உணர்வார்கள், பல்வேறு பொருட்களை அறிவார்கள், மொழியாற்றல், மகிழ்ச்சி, விரும்பிச் செய்யும் ஆற்றல், அறிவாற்றல், தலைமைத்துவம்.



# 12. கடந்து செல்லுதல்

இரண்டு அணிகளாகப் பிள்ளைகளைப் பிரியுங்கள். ஒரு அணியினரை கால் நீட்டி நிலத்தில் இருக்க விடுங்கள். இடையில் போதிய இடைவெளி தேவை. மற்ற அணியினர். இருப்பவர்களைக் கடந்து வரிசை யாக ஒருவர் பின் ஒருவராகச் செல்லவேண்டும். கடந்து சென்றபின் இருப்பவர்கள் ஒரு கால்மேல் மறுகாலையும் வைத்து நீட்டி இருக்க வேண்டும். இப்போது இரண்டு கால் மேலாக கடந்து செல்ல வேண்டும். கடந்து முடிந்து விட்டதா?

சரி இரண்டு கால்கள் மேல் ஒரு கையை வைத்துப் பிடிக்க வேண்டும். இரண்டு கால்கள் ஒரு கை ஆகியவற்றின் மேலால் கடந்து செல்ல வேண்டும். முடிந்து விட்டதா? அடுத்த கையையும் மேலே பிடிக்க வேண்டும். இப்போது இரண்டு கால்கள் இரு கைகள் மேலால் கடந்து செல்ல வேண்டும். ஒரு அணி கடந்து முடிந்ததும் மற்ற அணி மாறிச் செயற்பட வேண்டும்.


*விதிகள்*

கடந்து செல்லும் போது கடப்பவரின் கால் உடல் முட்டக் கூடாது. முட்டினால் ஆள் அவுட். அவர் ஆட்டம் இழப்பார். எந்த அணியினர் அதிகம் ஆட்டம் இழக்காமல் உள்ளனரோ, அவர்கள் வெற்றி பெற்றவராவார்.

*இந்த விளையாட்டால்* மனதை ஒருங்கிணைத்தல்
தற்துணிவு, திறன் விருத்தி
தசைநார் உடல் விருத்தி
மகிழ்ச்சி உருவாகிறது.

இந்த விளையாட்டை வேறு விதமாகவும் செய்யலாம்.

ஒரு அணியினர் வரிசையாகப் போதிய இடைவெளிவிட்டு தவழ்ந்து நிற்க வேண்டும். மற்ற அணியினர் தவழ்ந்து நிற்பவரின் முதுகில் கைகளை ஊன்றி பாய்ந்து செல்ல வேண்டும். தவழ்ந்து நிற்பவர் தலையை நிமிர்த்தக் கூடாது. தலையை நிமிர்த்தினால் பாய்பவர். "தலையை வெட்டி நாய்க்குப் போடு" என்று சொல்லிப் பாயலாம். பாய்ந்து முடிந்து விட்டதா? காலையும் கையையும் நிலத்தில் ஊன்றி நிற்கவிட்டுப் பாயலாம். அதன் பின் கைகளால் முழங்காலைப் பிடித்து நிற்க விட்டுப் பாயவிடலாம். எல்லோரும் பாய்ந்த பின் மற்ற அணியினரை மாற்றி விடலாம்.





# 13. காற்று மரங்களை ஆட்டுகிறது


பெரிய காடு இருக்கிறது. மரங்களைக் காற்று வீசி ஆட்டுகிறது. கிளை களை வளைத்து இலைகளைப் பறித்து வீசுகிறது. எனக் கதை கூற வேண்டும். பிள்ளைகள் தான் மரங்கள். அவர்கள் கால்களைச் சற்று அகட்டி வைத்து கைகளை உயர்த்தி நிற்க வேண்டும். விளையாட்டுத் தொடங்குமுன் பிள்ளைகள் வெளியில் சென்று இலை, குழைகளைச் சேகரித்து கைகளில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகளை அழைத்துப் பரந்து நிற்க விட வேண்டும். "இப்போது காற்று வீசுகிறது" என ஆசிரியர் சொல்ல வேண்டும். பிள்ளைகள் மெல்ல அசையத் தொடங்க வேண்டும். "பலமாக வீசுகிறது" என்னும் போது நன்றாக அசைய வேண்டும். "பயங்கரமாகப் புயல் வீசுகிறது" என்னும் போது வேகமாக சுழன்று அசைய வேண்டும். அடிக்கடி இலைகளையும், குழைகளையும் வீசி அசைய வேண்டும். சிலர் கீழே சரிந்து விழலாம். அசையும் போது கால்கள் அப்படியே இருக்க வேண்டும். "காற்று மெதுவாகக் குறைகிறது" எனும் போது மெதுவாக அசைந்து வழமைக்கு மாற வேண்டும். செய்து பாருங்கள். பிள்ளைகளையும் ஆசிரியர் சொல்வது போல் சொல்ல விடலாம். பாடலையும் சேர்த்துக் கொள்ளலாம்.

பாடல்:

*மெல்லக் காற்று வீசும் - எங்கள்*
*மேனி தொட்டுப் போகும்*
*உள்ளம் மகிழ்ந்து கொள்ளும் - உடல்*
*உரஞ்சி நெளிந்து ஆடும்.*

*புயலாய் காற்று விசும் - எழும்*
*புழுதி வானில் பூசும்*
*உயர்ந்த மரங்கள் துடைப்பம் - தேடி*
*எடுத்து வானைத் துடைக்கும்.*



# 14. கண்ணாரே கடையாரே

இந்த விளையாட்டை கீக்கம் பொத்துதல் என்று சாதாரணமாக அழைப்பார்கள். வகுப்பறை உள், வெளி எங்கும் விளையாடலாம்.

பிள்ளைகளை அழையுங்கள். ஒருவரைத் தெரிந்து எடுத்து அவரது கண்களைக் கையால் மறைக்க வேண்டும். மற்றவர்களைப் போய் ஒழிந்து கொள்ளச் சொல்ல வேண்டும். கண்களைப் பொத்தியவர் இவ்வாறு கூறும் படி சொல்லிக் கொடுக்க வேண்டும்.

"கண்ணாரே கடையாரே
காக்கண்ணம் பூச்சியாரே
ஈயாரே எறும்பாரே
கீக்கமோ"

கண்களைப் பொத்தியிருப்பவர் இவ்வாறு சத்தமாகக் கூறியதும் ஒழிந்திருப்பவர்கள் "ஓம்" என்று பதில் கொடுக்க வேண்டும்.

"போய்ப் பிடித்து வா" என்று அவரை அனுப்ப வேண்டும். "வருகிறேன் வருகிறேன்" என்று கூறி ஒழிந்திருப்பவர்களைத் தேட வேண்டும். "கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்" என்று சொல்லி ஒழிந்திருப்பவரை ஒவ்வொருவராக் கண்டு பெயரைச் சொல்லி "குத்து" என்று கூற வேண்டும். அப்போது பெயர் சொல்லப்பட்டவர் ஆட்டம் இழப்பார். ஆட்டம் இழந்தவர் கீக்கம் பொத்துவார்.

*பயன்:* மொழி விருத்தி, கண்டறிதல், ஆராயும் தன்மை, உடல் விருத்தி, மகிழ்ச்சி உருவாகும்.


*கற்றல் விரிவாக்கம்:* பிள்ளைகளின் சட்டைகளில் வேண்டிய சொல்லட்டைகளைப் பொருத்தி, அவற்றைக் கண்டு பிடித்து, வரும்படி அறிவுறுத்தலாம்





# 15. பந்தால் எறிதல்

பிள்ளைகளை அழையுங்கள். பெரிய வட்டம் வரையுங்கள். பிள்ளைகளை இரு பிரிவுகளாக்குங்கள். ஒரு பிரிவினரை வட்டத்துக்குள் விடுங்கள். மறு பிரிவினரை வட்டத்துக்கு வெளியே நிற்க விடுங்கள். பெரிய பிளாஸ்ரிக் பந்தை வெளியில் உள்ளவர்களிடம் கொடுங்கள். அவர்கள் வட்டத்துக்குள் இருப்பவர்களுக்கு எறிய வேண்டும். உள் இருப்பவர்கள் பந்து படாது மாற வேண்டும். பந்து பட்டால் ஆட்டம் இழப்பர். அவர்கள் வெளியில் வர வேண்டும். உள் இருப்பவர்கள் அனைவரும் ஆட்டம் இழந்த பின் வட்டத்தின் வெளியே நின்று பந்தை வீச வேண்டும். வெளியில் நின்றவர்கள் வட்டத்துக்குள் செல்ல வேண்டும். இவ்வாறு விளையாட்டைத் தொடரலாம். இந்த விளையாட்டின் பயனை நீங்களே தீர்மானிக்கலாம்.



கற்றல் விரிவாக்கம்: வட்டத்துள் நிற்போருக்கு சொல்லட்டைகளையோ இலக்கங்களையோ பொருத்திவிடலாம். ஆசிரியர் எந்தச் சொல்லை அல்லது இலக்கத்தைச் சொல்கிறாரோ அந்த இலக்கத்துக்குரியவருக்கு எறிய வேண்டும்.


# 16. எழுத்து வேட்டை

காட்போட் குழாய்களைத் தேடுங்கள். அரை அடி கொண்டதாகப் பல குழாய்களை வெட்டி எடுங்கள். இரு குழாய்கள் வீதம் எடுங்கள். இரண்டையும் இணைத்துக் கட்டி செலொரேப்பால் ஒட்டுங்கள். இரு கண்ணிலும் வைத்துப் பாருங்கள். பைனாக்குளர். (தொலைநோக்கி) உருவாகிவிடும். நூலை எடுத்துக் தொடுத்து கழுத்தில் தொங்க விடக் கூடியதாகக் கட்டுங்கள். ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு தொலைநோக்கி வீதம் கொடுங்கள். கழுத்தில் தொங்கவிடச் சொல்லுங்கள்.

சுற்றுப்புறச் சூழலில் காணும் பொருட்களைப் பற்றிக் கூறவிடுங்கள். வெளியில் சென்று பார்த்த மரம், செடி, கொடி, பறவை, விலங்கு, மனிதர்கள் பற்றிக் கூறவிடுங்கள். உற்சாகமாக உரையாடுவார்கள்.

ஏற்கனவே எழுத்துக்களைத் தயாரித்து அங்கும் இங்கும் போட்டு விட வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் நீங்கள் விரும்பிய எழுத்தைக் கொடுங்கள். நன்கு பார்க்கும்படி கூறுங்கள். பார்த்த பின் திருப்பிப் பெற்றுவிடுங்கள். வெளியில் சென்று அவர்கள் பார்த்த எழுத்துக்களைத் தேடி எடுத்து வரக் கூறுங்கள். பைனாக்குளரை கண்களில் பிடித்தபடியே தேட வேண்டும். உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் செயற்படுவார்கள். பிள்ளைகள் எடுத்து வந்ததும் பாராட்ட வேண்டும். இவ்வாறு சொல்லட்டைகள், படங்கள், படங்களோடு சொற்கள், பின் படத்தைக் காட்டி சொல்லட்டைகளையும், சொல் அட்டைகளைக் காட்டிப் படங்களையும் வேட்டையாடி வரத் தூண்டலாம். இலகுவில் எழுத்து, இலக்கம், சொல், ஆகியவற்றைத் தாங்களே கற்று விடுவார்கள். சூழலைப் புரிந்து கொள்வார்கள்.





# 17. அரசர் சொல்கிறார்

மொழி அறிவு விருத்திக்கும், கிரகித்தற் பயிற்சிக்கும் விளங்கிச் செயற்படும் திறன் விருத்திக்கும், உடல் தசைநார் விருத்திக்கும், மகிழ்ச்சிக்கும் ஏற்றது இந்த விளையாட்டு.

1. "நான் சொல்கிறேன் துள்ளுங்கள்" என்றால் செயற்படக் கூடாது.
2. அரசர் சொல்கிறார் 'ஆடுங்கள்' என்றதும் ஆட வேண்டும்.

இவ்வாறே நான் சொல்கிறேன் என்பதற்கும் அரசர் சொல்கிறார் என்பதற்கும் பிள்ளைகள் வித்தியாசத்தைப் புரிந்து செயற்பட வையுங்கள். நீங்கள் விரும்பிய கட்டளைகளைக் கொடுக்கலாம். செய்து பாருங்கள் கலகலப்புப் பரவிவரும்.

இவ்வகை விளையாட்டுக்கள் வகுப்பறையைச் சுத்தமாக வைக்கவும் ஒழுங்காக அடுக்கி வைப்பதற்கும் கையாளக் கூடிய விளையாட்டு. ஒற்றை எண்கள் என்பனவற்றையும் விளக்கி, அதற்கேற்ற வழிகளில் செயற்பாடுகளைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.




# 18. ஆடும் வீடும் எல்லாம்

இது மிகவும் சுவார்சியமான விளையாட்டு. கிரகித்தல், விளங்கிச் செயற்படுதல், விவேக வளர்ச்சி, அறிவாற்றல், உடல் அபிவிருத்தி போன்ற பலதும் அடங்கியது. பெரியவர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

பிள்ளைகளை அழையுங்கள். மூவராகச் சேரவிடுங்கள். இருவரை கைகளை உயர்த்திப் பிடித்து வீடு போல் நிற்க விடுங்கள். ஒருவரை அந்த வீட்டுக்குள் விடுங்கள். அவர்தான் ஆடு. இப்போது விளையாடும் முறையை விளக்குங்கள்.

1. 'ஆடு' என்று நீங்கள் சொன்னால் ஆடுகள் எழுந்து வேறு வீடுகளுக் குள் ஓட வேண்டும். வீடு அப்படியே நிற்க வேண்டும்.
2. 'வீடு' என்று சொன்னால் ஆடுகள் அப்படியே இருக்க, வீடுகள் ஓடி வேறு ஆடுகளுக்கு வீடாக மாற வேண்டும்.
3. எல்லாம் என்று சொன்னால் ஆடு, வீடு எல்லாம் கலைந்து மீண்டும் வீடாகவும் ஆடாகவும் ஒழுங்காக இருக்க வேண்டும்.

தொடங்குங்கள் விளையாட்டை. பாருங்கள் கலகலப்பை





# 19. நண்டு நடை

பிள்ளைகளை அழையுங்கள் இரண்டு குழுக்களாகப் பிரியுங்கள். நான்கு பேராகச் சோடி சேர்ந்து ஆளுக்காள் முதுகு காட்டி நிற்க வையுங்கள். இருவர் முதுகுக்கிடையே ஒரு பந்தை வையுங்கள். இவ்வாறே சோடி முதுகுகளுக் கிடையே பந்துகளை வைத்துவிடுங்கள். பந்து விழாதபடிக்கு அழுத்திக் கொண்டு பக்க வாட்டில் நடக்கும் படி கூறுங்கள். இரண்டு சோடிகளை ஒன்றாக்கி இட, வலக் கால்களை சீலைத்துண்டால் கட்டி விடுங்கள். நடக்கும்படி கட்டளை இடுங்கள்.

விசிலை ஊதுங்கள். நடப்பதைப் பாருங்கள் ஆளுக்காள் ஒத்துழைப்புக் கொடுக்காவிடில் விளையாட்டு ருசிக்காது. பக்க வாட்டில் நடப்பது வேடிக்கையானது. பாடலையும் சேர்த்துக் கொள்ளலாம்

ஆளுக்காள் ஒத்துழைப்பு வழங்கல்,கூட்டுறவு,குழு உணர்வு உடல் விருத்தி உருவாகும்.

பாடல்:

*நாலு காலில் ஆட்டுக்குட்டி*
*நடந்து திரிகிறார்.*
*பாலும் குடித்துக் கன்றுக்குட்டி*
*பதுங்கி நடக்கிறார்*
*எட்டுக் காலில் நண்டுத் தம்பி*
*எப்படி நடக்கிறார்*
*எட்டி இடம் வலமும் பார்த்து*
*எடுப்பாய் ஓடுறார்.*




# 20. புயல் வீசுகிறது

பெரியதொரு வட்டம் வரையுங்கள் அதற்குள் ஒரே அளவான 5 சிறு வட்டங்கள் வரையுங்கள். பிள்ளைகளைப் பெரிய வட்டத்துக்குள் உலாவரச் செய்யுங்கள். "திடீரென புயல் வீசுகிறது வீடுகளுக்குள் ஓடுங்கள்" என்று கூறுங்கள். வட்டங்களுக்குள் ஓடிச் சென்று நின்று கொள்ள வேண்டும். "புயல் ஓய்ந்து விட்டது" என்று சொன்னதும் பிள்ளைகள் பெரிய வட்டத்துக்குள் உலாவர வேண்டும்.

5 வட்டங்களில் ஒன்றை அழித்து விடுங்கள். 'புயல் வீசுகிறது' என்று கூறுங்கள். நான்கு வட்டத்துள் எல்லோரும் நிற்பார்கள்.'புயல் ஓய்ந்து விட்டது' என்று சொல்லுங்கள் எல்லோரும் பெரிய வட்டத்துள் உலாவருவர். இன்னுமொரு வட்டத்தை நீக்கி விடுங்கள்.மீண்டும் கூறுங்கள். 3 வட்டத்துக்குள் நிற்பார்கள் . புயல் ஓய்ந்து விட்டதாகக் கூறுங்கள். பெரிய வட்டத்துள் உலா வருவார்கள். ஒரு வட்டத்தை நீக்கி விடுங்கள். மீண்டும் புயல் வீசுகிறது என்று கூறுங்கள். வட்டத்துள் ஓடுவார்கள். வட்டத்துள் இடம்பிடிப்பதற்காகப் பினைவார்கள். இப்படியே தொடர்ந்து செய்யலாம். ஒவ்வொரு முறையும் வட்டத்துக்குள் நிற்க முடியாதவர்கள் ஆட்டம் இழப்பார்கள். வேடிக்கையாக மகிழ்ச்சியாக இருக்கும்.

இந்த விளையாட்டால் கிரகித்தற்திறன் உருவாகிறது. தற்காப்பும் துணிவும் ஏற்படுகிறது. பல்வேறு அபிவிருத்திகளும் ஏற்படுகிறது.





# 21. நீர் இறைத்தல்

குழந்தைகளை அழையுங்கள். 4 பேராக 4,5 குழுக்களாக பிரியுங்கள். எத்தனை குழுக்கள் உண்டோ அத்தனை வாயகன்ற பாத்திரங்களை எடுத்து நீர் நிறைத்துக் கொள்ளுங்கள். எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்களோ அத்தனை பிளாஸ்ரிக் கிண்ணங்களையும் எடுங்கள். ஒவ்வொரு பிள்ளையின் கையிலும் ஒரே அளவுள்ள பஞ்சு அல்லது துணியைக் கொடுங்கள். ஒவ்வொரு கிண்ணத்தையும் கொடுங்கள். நீருள்ள ஒவ்வொரு பாத்திரத்தைச் சுற்றியும் ஒவ்வொரு குழுவையும் இருக்க விடுங்கள்.

நீங்கள் விசில் ஊதியதும் ஒவ்வொரு பிள்ளையும் துணியை நனைத்து கிண்ணத்தில் நீரைப் பிழிந்து நிரப்ப வேண்டும். நிரப்பும் பிள்ளைகள் வெற்றி பெறுவார்கள். பாராட்டுங்கள். கெட்டிக்காரப்பிள்ளைகள் கிண்ணத்தைப் பாத்திரத்தின் அருகில் வைத்து நீரைச் சிந்தாமல் பிழிந்து விரைவில் நிரப்புவார்கள். பிள்ளைகளின் கெட்டித்தனத்தை மதிப்பிடப் பெரிதும் உதவும் விளையாட்டு இது.



# 22. முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் நடத்தல்

பிள்ளைகளை அழையுங்கள் அவர்களுக்கு விரும்பியவர்களோடு சோடி சேரச் சொல்லுங்கள். சோடி சேர்ந்ததும் முதுகுப் பக்கம் முட்டும் படி நிற்க வைத்து கைகளைக் கோர்த்துக் கொள்ளச் சொல்லுங்கள். கைகள் கோர்த்துக் கொண்டதும், முன் பக்கம் நோக்கி நடக்கச் சொல்லுங் கள். முதலில் ஒரு சோடியை மாதிரிக்காச் செய்வியுங்கள். சோடிகள் இருவரும் எதிர்மாறாகப் பார்த்து நிற்பதால் இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும். முன்னால் ஒருவர் நடக்க அதற்கேற்ப மற்றவர் பின்னால் கால்களை எடுத்து வைக்க வேண்டும். அதே போல் பக்கமாகவும் நடக்க உற்சாகப்படுத்தவும்.

மாதிரி முடிந்ததும் அனைவரையும் செய்வதற்குத் தூண்டவும். செய்து பாருங்கள். ஆளையாள் புரிந்து கொள்ளவும் ஒருவருடைய சொல்லைக் கேட்டு நடக்கவும் உதவி புரியவும் விட்டுக் கொடுக்கவும் உடலை இசைவாக்கம் பெறுவதற்கும் பேருதவியாக இருக்கும்.

இதனை வேறு விதமாகவும் செய்யலாம் சோடி சேர்த்து பக்கத்தில் நிற்க வைத்து தோளில் கைகளைப் போட்டு ஒருவரின் வலக்காலையும் மற்றவரின் இடக்காலையும் சேர்த்துத் துணியால் கட்டிவிட்டு மூன்று காலில் நடக்க விடலாம், ஓடவும் விடலாம், பாயவும் விடலாம்.






# 23. தலைவனைப் பின்பற்றல்

பிள்ளைகளை அழையுங்கள். இரு வரிசையாக்குங்கள். இரு வரிசை களின் நடுவிலும் நீங்கள் நில்லுங்கள். உங்களைப் பார்த்த படியே பிள்ளைகள் நிற்பார்கள். எதிர்த் திசையில் பார்த்து நிற்கும் படி பணியுங்கள். சரி இரண்டு அடி முன்னால் வைத்து நடவுங்கள் என்று சொல்லுங்கள். மீண்டும் உங்களைப் பார்க்கும் படி செய்யுங்கள். தாங்கள் நிற்கும் இடத்தில் அடையாளம் இடச் சொல்லுங்கள். ஒரு பிள்ளையை உங்கள் பக்கம் அழையுங்கள். அந்தப் பிள்ளையைத் துள்ளச் சொல்லுங்கள். அந்தப் பிள்ளை செய்வது போல் எல்லோரையும் செய்யச் சொல்லுங்கள். அடுத்த பிள்ளையை அழையுங்கள்.

கூனி நடக்கச் சொல்லுங்கள்.
நொண்டி நடக்கச் சொல்லுங்கள்
மூக்கைச் சொறியச் சொல்லுங்கள்.
அழச் சொல்லுங்கள்.
சிரிக்கச் சொல்லுங்கள்.

இவ்வாறு ஒவ்வொரு பிள்ளையும் செய்ய வேண்டும். பிள்ளை செய்வதை எல்லோரும் பின்பற்ற வேண்டும். எல்லோரும் முன்வந்து செய்த பின் ஒருவர் பின் ஒருவராக வரிசையாக நிற்க வேண்டும்.

ஆசிரியர் விசில் ஊதியவுடன் இரண்டு வரிசையிலும் நிற்கும் முதலாமவர் தமது வரிசையில் உள்ளவர்களுக்கு ஊடாகப் விலத்தி பாம்பு ஓடுவது போல் ஓடி முன்னால் நிற்க வேண்டும். அவர்போய் நின்றதும் இரண்டாமவர் ஓட வேண்டும். இப்படியே கடைசியில் நிற்பவர் வரை ஓடி முடிக்க வேண்டும். எந்த அணி வெற்றி பெறுகிறதோ அதனைப் பாராட்ட அனைவரும் கைதட்ட வேண்டும்.



# 24. கண்கட்டி வித்தை


பிள்ளைகளை அழையுங்கள். இரு பிரிவினராக்குங்கள். இரண்டு வரிசையில் நிற்க வையுங்கள். வரிசையில் நிற்பவர்களுக்கிடையில் உள்ள இடம்தான் வீதி. வரிசையில் நிற்பவர் ஆளையால் பார்த்து நிற்க வேண்டும். வரிசைகளுக்கிடையில் போதிய இடம் வேண்டும்.

இரண்டு பிள்ளைகளை அழைத்துத் துணியால் கண்களை மறைத்துக் கட்டுங்கள். கட்டிய பின் தூரத்தே விட்டு விடுங்கள் விசில் ஊதிய பின். ஒரு ஆள் மற்ற ஆளைப் பிடிக்க வேண்டும்.

ஊதுங்கள் விசிலை.
தங்கள் அணியினருக்குச் சத்தமிட்டு வழிகாட்டலாம்.
நேராகப் போ......
வலப் பக்கம் திரும்பு......
இடப் பக்கம் திரும்பு.......
பின்னால் திரும்பு......
பிடி.

இப்படி உற்சாகப்படுத்தலாம். பிடிபடாமல் யாரையாவது தொட்டால் அவர் கண்களைக் கட்டி விளையாட விடலாம். இவ்வாறு விளையாட்டைத் தொடரலாம். இந்த விளையாட்டால் என்ன நன்மை என்று கேட்கின்றீர்களா? நிறையவே உண்டு.

தற்துணிவு, ஒத்துழைப்பு, உடல் விருத்தி, மனமகிழ்ச்சி, கிரகித்தல், விவேகம்.





# 25. முன்பள்ளி கைமரம்

இலைகளை நீக்கிய மரக்கிளை ஒன்றை வாளியுள் வைத்து அது விழாதபடி வாளியுள் மணலை இட வேண்டும். "இலை இல்லாத இந்த மரத்துக்கு இலை வேண்டும். உங்கள் கையைப் பதித்து வரைந்து நிறந்தீட்டி இலைகளாக ஒட்டுவோம்" என்று ஆசிரியர் விளக்க வேண்டும்.

வரைதல் தாள்களைக் கொடுத்து தாளில் கையை விரித்து வைத்துப் பென்சிலால் வரைந்து நிறந் தீட்ட உதவுங்கள். நிறம் தீட்டிய பின் கத்தரிக் கோலால் வரைந்த கையின் படங்களை வெட்டி எடுக்க உதவுங்கள். தங்களது பெயர்களை எழுதவும் உதவ வேண்டும். விரல்களின் பெயரை எழுதலாம். விரல்களில் இலக்கங்கள் எழுதலாம்

தமது பெயர்களை எழுதிய படங்களை மரக்கிளையில் ஒட்ட உதவ வேண்டும். அவர்களையே செய்விக்க வேண்டும். ஒட்டி முடிந்த பின் பாராட்ட வேண்டும். தமது பெயர் கொண்ட இலைகளைக் கண்டு பிடிக்க வேண்டும்.

பிள்ளைகள் பல திறன்களை இவ்விளையாட்டால் கற்றுக் கொள்வர்.



# 26. தடைதாண்டி ஓடுவோம்

பிள்ளைகளை அழையுங்கள். கதை சொல்லுங்கள். "நாங்கள் காட்டுக்குள் போகின்றோம். நடுக் காட்டில் 3 சிங்கங்கள் வந்து விட்டன. கண்டதும் துரத்தத் தொடங்கின. ஓடத் தொடங்கினோம். பாய்ந்து, தவழ்ந்து, புகுந்து ஓடினோம்" என்று கூற வேண்டும்.

விளையாட்டுத் தொடங்கட்டும்


சிங்கமாக 3 பிள்ளைகளை அழையுங்கள். அவர்கள் ஆட்களைக் கண்டதும் சிங்கமாக சத்தமிட்டுத் துரத்த வேண்டும். மேசை, கதிரை, வெற்றுப் பெட்டிகளை தடைகளாக ஆயத்தம் செய்திருக்க வேண்டும்.

பாடல்

*சிங்க ராசா நானடா*
*சின்னப் பொடியள் கேளுங்கோ*
*உங்கள் உயிர்மேல் ஆசையோ*
*ஓடித் தப்பிப் போங்கடா*

சிங்கத்தின் சத்தத்தைக் கேட்ட ஆட்கள் மேசைக்குக் கீழே புகுந்தும், வெற்றுப் பெட்டிக்கு மேலால் பாய்ந்தும், தவழ்ந்தும் உருண்டும் செல்ல வேண்டும். சிங்கம் பிடித்தால் பிடிபட்டவர் சிங்கமாக மாறிவிடுவார். மற்றவர் ஓட வேண்டும். இவ்வாறு சிங்கமாக எல்லோரும் மாறும் வரை விளையாட்டுத் தொடரலாம்.

தற்காப்பு, தற்துணிவு, உடல் விருத்தி, அறிவாற்றல் உருவாகும்.





# 27. சிலந்தியும் தேனீயும்

பிள்ளைகளை அழையுங்கள். பெரிய வட்டம் ஒன்றை வரையுங் கள். அது சிலந்தியின் வலை. வலையில் சிலந்தி ஆனந்தமாக நித்திரை செய்யும். பிள்ளைகளில் ஒருவரைச் சிலந்தியாக நடிக்க வையுங்கள். மற்ற வர்கள் தேனீக்கள். தேனீக்கள் இரைந்து கொண்டு வட்டத்தைச் சுற்ற வேண்டும். பின் சிலந்தியின் வலையினுள் புக வேண்டும். சிலந்தியின் நித்திரையைக் குழப்ப வேண்டும்.

பாடல்:

**தேனீ :**
*பாடி இரைந்து வருகிறோம்.*
*பறந்து பாடி வருகிறோம்*
*தேடித் தேனைக் குடிக்கிறோம்*
*சிலந்தி வலையில் நுழைகிறோம்*

*தூக்கம் என்ன சிலந்தியே*
*சோம்பல் ஏனோ சிலந்தியே*
*ஆக்க முயற்சி செய்திடு*
*அதிலே இன்பம் கண்டிடு*

சிலந்தி:
*ஆக்கி வலையை வைத்துள்ளேன்*
*அதிலே பட்டதை உண்கிறேன்*
*தூக்கம் என்றா சொல்கிறாய்*
*சுருக்கு வைத்து இருக்கின்றேன்*

*சொன்னால் கேளும் தேனியே*
*துள்ளி ஓடு தேனியே*
*என்னால் பொறுக்க முடியுமா*
*இழுத்து உண்பேன் புரியுமா*

கோபம் கொண்ட சிலந்தி தேனீக்களை விரட்டிப் பிடிக்க வேண்டும். வட்டத்தைவிட்டு சிலந்தி வெளியில் போகக் கூடாது. தேனீக்களை வட்டத் துக்குள்ளேயே பிடிக்க வேண்டும். தேனீக்கள் பிடிபடாது வட்டத்துக்கு வெளியே தப்பி ஓடவேண்டும். பிடிபட்ட தேனீ சிலந்தியாகி விளையாட் டைத் தொடர வேண்டும்.

விளக்கம் கொடுத்த பின் விளையாடச் சொல்லுங்கள். பிள்ளை களது மகிழ்ச்சியைப் பாருங்கள்.

மொழியாற்றல், எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கும் விழிப்புணர்வு, தற்காப்பு, உடல் விருத்தி, மகிழ்ச்சி.





# 28. மந்திரக் கோல்

பிள்ளைகளை அழையுங்கள். இரு அணிகளாகப் பிரியுங்கள். பச்சை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், நீலம், உதா எனப் பல வகை நிறங்களில் இலைகள், பூக்கள், நிறக்கடதாசிகள், துணித் துண்டுகள் என எடுங்கள். ஒரே நிறத்தை இரண்டு பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். ஒருவர் ஒரு அணியிலும் மற்றவர் மற்ற அணியிலும் நிற்க வேண்டும். இப்போது ஒரு அணியில் பல நிறங்கள் இருக்கும். அதற்குப் பொருத்தமாக மற்ற அணியிலும் இருக்கும். சரி செய்து கொள்ளுங்கள்.

எந்த அணியிலும் சேராத ஒருவரை அழையுங்கள். அவரது கையில் ஒரு சிறிய ஒரு அடி நீளமான தடியைக் கொடுங்கள். அது மந்திரக்கோல். தடியை வைத்திருப்பவர், மந்திரவாதி. மந்திரவாதி ஒரு அணியின் அருகில் போய் "ஓம்.....ஜீ.........பொம்பா......." என்று ஒருவரைத் தட்ட வேண்டும். அந்த அணியினர் சிரித்துக் கொண்டு மந்திர வாதியைச் சுற்றி ஓடி மற்ற அணியையும் சுற்றிவிட்டுப் பழையபடி அதே இடத்தில் நிற்க வேண்டும்.

மந்திரவாதி அடுத்த அணியின் அருகில் போய் "ஜீ பொம்பொம்பா" என்று ஒருவரைத் தட்ட வேண்டும். அந்த அணியினர் சிரித்துக் கொண்டு மந்திரவாதியையும், மற்ற அணியினரையும் சுற்றி விட்டு பழையபடி அதே இடத்தில் நிற்க வேண்டும்.

மந்திரவாதி அடுத்த அணியின் பக்கம் போய் "ஜீ பொம் பொம் பொம்பா" என்று ஒருவரைத் தட்ட வேண்டும். அந்த அணியினர் துள்ளித் துள்ளி ஆட வேண்டும். ஆடிக் கொண்டே எதிரணியைச் சுற்றி வந்து பழையபடி நிற்க வேண்டும்.



முதல் அணியின் பக்கம் வந்த மந்திரவாதி "பொம்பொம்....பூ....... பொம்பொம்" என்ற சொல்லித் தட்ட வேண்டும்.

அந்த அணியினர் வண்ணத்துப் பூச்சிகளாக பறந்து பாவனை செய்ய வேண்டும். இப்போது ஆசிரியர் காற்று வீசுவது போல் "உஸ்ஸ்....." என்று சத்தம் செய்ய வேண்டும். வண்ணத்தப் பூச்சிகள் காற்றில் களைத்தது போல் சோர்ந்து மெதுவாகப் பறக்க வேண்டும். மந்திரவாதி அதைப் பார்த்துவிட்டு "சிங்கு பொங்கா" என்று மற்ற அணியினரைத் தட்ட அவர்கள் வெளிக் கிளம்பி தங்களின் நிறமுள்ள வண்ணத்துப்பூச்சியை மட்டும் சோடி சேர்த்து வந்து நிற்க வேண்டும்.எல்லா சோடியும் வந்தபின் கைதட்டி மகிழலாம்.





# 29. செட்டியார் வீட்டுக் கலியாணம்

இது ஒரு அருமையான விளையாட்டு. இந்த விளையாட்டு மூலம் மொழியாற்றல், நகைச்சுவை உணர்வு, தற்துணிவு, எண் ஆற்றல், கணிப்பிடும் ஆற்றல், உடல் விருத்தியோடு மகிழ்ச்சியும் ஏற்படும்.

செட்டியார் வீட்டில் கலியாணம். பூசணிக்காய்க்கு முற்கூட்டியே செய்தி அனுப்பி, பின் பூசனிக்காயைப் பெற்றுக் கொள்வதாகக் கதை.

பிள்ளைகளை அழையுங்கள். தோட்டக்காரனாக ஒரு பிள்ளை. வேலையாளாக இன்னும் ஒரு பிள்ளை. ஒரு உறுதியான கம்பம் வேண்டும். கம்பத்தைப் பிடித்தபடி பெரிய பிள்ளை. அதன் இடுப்பைக் கோர்த்துப் பிடித்தபடி தொடர்ச்சியாகப் பத்து, பன்னிரண்டு பிள்ளைகள் தேவை.

கம்பத்தை மையமாகக் கொண்டு ஒரு வட்டம் வரைய வேண்டும். அது தான் தோட்டம். விளையாடத் தொடங்குவோம்.

தோட்டத்துள் தோட்டக்காரன் நிற்க வேண்டும். வேலைக்காரன் தோட்டப்படலையில் வந்து செருமுவார்.

வேலைக்காரன் : எ........(செருமுதல் வேண்டும்)
தோட்டக்காரன் : ஆரது தலை வாசலில்.
வேலைக்காரன் : நான்தான் சொறிக்கணக்கன் சுண்டெலிப்பல்லன்
தோட்டக்காரன் : என்ன விசயம்
வேலைக்காரன் : செட்டியார் மகளுக்குக் கலியாணம் வருகுதாம். பூசனிக்காய் வேணுமாம்.
தோட்டக்காரன் : அதுக்கென்ன...... இப்பதான் காடு வெட்டிக் கொடி நாட்டிக் கிடக்கு. தரலாம் என்று சொல்லு.

சொறிக்கணக்கன் சென்று மீண்டும் வர வேண்டும். வந்து செரும வேண்டும்.


தோட்டக்காரன் : யாரது தலைவாசலில்.
வேலைக்காரன் : நான்தான் சொறிக்கணக்கன் சுண்டெலிப்பல்லன்
தோட்டக்காரன் : எங்க வந்தநீ
வேலைக்காரன் : செட்டியார் மகளுக்கு கலியாணமாம். பூசணிக் காய் வேணுமாம்.

தோட்டக்காரன் : எப்ப கலியாணமாம்.
வேலைக்காரன் : தை மாதம் திங்கட்கிழமை.
தோட்டக்காரன் : எப்ப பூசணிக்காய் வேணுமாம்.
வேலைக்காரன் : தை மாதம் 10 ஆம் திகதியாம்
தோட்டக்காரன் : சரி வந்து எடுத்திட்டுப் போகலாம்.

சொறியா் திரும்பி வந்து செரும வேண்டும்.

தோட்டக்காரன் : யாரது தலைவாசலில்.
வேலைக்காரன் : நான்தான் சொறிக்கணக்கன் சுண்டெலிப் பல்லன்.
தோட்டக்காரன் : செட்டியார் வீட்டுக் கலியாணமோ.
வேலைக்காரன் : ஓமோம்.
தோட்டக்காரன் : இந்தா கிடக்கு.... முத்தல் காயாகப் பார்த்து பிடுங்கிட்டு போ.
வேலைக்காரன் : (சுண்டிப் பார்க்க வேணும்...)இது முத்தல் இது பிஞ்சு.... இது இடைக்காய் ...
தோட்டக்காரன் : சரி சரி..... பிடுங்கு......


(வேலைக்காரன் பிடுங்கத் தொடங்க வேண்டும். ஒவ்வொரு காயாக இழுத்துப் பிடுங்கவேணும். காய்கள் இலகுவில் வரக்கூடாது. வேடிக்கையைப் பாருங்கள். இதனை ஒரு நாடகம் போல் செய்விக்கலாம்.)





# 30. காட்டில் யானை

பிள்ளைகளை அழையுங்கள் ஒரு நீள் சதுரத்தை வரையுங்கள். அதுதான் காடு. நீள் சதுரத்தின் மூலைகளில் அரைவட்டம் வரைந்து கொள்ளுங்கள். நீள் சதுரத்தின் மத்தியில் ஒரு சிறுவட்டம் வரைந்து கொள்ள வேண்டும்.




நான்கு நிறங்களில் 1 - 5 வரை இலக்கங்கள் அட்டையில் எழுதிக் கொள்ள வேண்டும். பிள்ளைகளை 5 பேர் கொண்ட 4 குழுக்களாகப் பிரியுங் கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு நிறத்தில் 1-5 வரை இலக்கங்கள் எழுதிய அட்டைகளைக் கொடுங்கள். 4 குழுவுக்கும் அந்தந்த நிறத்தில் எழுதிய அட்டைகளை வழங்கி இலக்கங்களைச் சட்டையில் அணியச் செய்யுங்கள்.

இலக்கம் 1 அப்பா யானை (4 அப்பா யானைகள் இருக்கும்)
இலக்கம் 5 அம்மா யானை (4 அம்மா யானைகள் இருக்கும்)
மற்றவை குட்டி யானைகள்.
இனி விளையாடத் தொடங்குவோம்.

பெரிய காட்டின் நடுவே வெளி இருந்தது. சிறு குளமும் இருந்தது. காட்டின் 4 பகுதிகளிலும் வெவ்வேறு நிறமுள்ள யானைகள் வாழ்ந்தன. இரவில் யானைகள் வெளிக்கு வரும். நீர் குடிக்கும். கலந்து வேற்றுமை இல்லாது விளையாடும். திடீரென தீப்பிளம்பு தோன்றும். யானைகள் தலை தெறிக்க ஓடும் - எனக் கதை கூற வேண்டும். எந்தக் காட்டுக்கும் ஓடலாம். ஆனால் தங்கள் கூட்டம் மாறக் கூடாது. சரி. யானைக் கூட்டங்களை காட்டுக்கு அனுப்புங்கள். இப்போது இரவு. விசிலை ஊதுங்கள். யானைகள் பாடலுக்கு ஏற்றவாறு அசைந்து செய்து காட்ட வேண்டும்.

பாடல்:- அப்பா யானை முன்னே வருகுது
அம்மா யானை பின்னே வருகுது
ஆடி ஆடியே குட்டி வருகுது
ஆட்டம் போட்டுமே எல்லாம் வருகுது

காட்டு யானைகள்
களித்து மகிழுது
சேட்டை செய்துமே
சேர்ந்து ஆடுது.

கூட்டம் கூடுது
குதித்து ஆடுது
பாட்டுப் பாடுது
பாய்ந்து துள்ளுது

யானைகள் ஓடி ஆடி கலந்து திரிய வேண்டும். ஆசிரியர் விசிலை ஊதி சிவப்புப் பொருளை நடுவில் எறிய வேண்டும். யானைகள் தலை தெறிக்கக் காடுகளுக்கு ஓட வேண்டும். காட்டை அடைந்ததும் வரிசை யாக நிற்க வேண்டும். அப்பா, அம்மா யானைகள் தமது குட்டிகள் வந்துள் ளனவா எனச் சுற்றி வந்து பார்க்க வேண்டும். இதனால் குடும்ப அங்கத்தவர், இலக்கங்கள் என்பன மனதில் பதியும். யானைகள் காட்டில் இலக்கம் நிறம் மாறி இருந்தால் ஆட்டம் இழக்கும்.

செய்து பாருங்கள்.

மொழியாற்றல், பாடலை விளங்கி இயங்கும் ஆற்றல், கணித எண்ணக்கரு, ஆபத்திலும் சுயமிழக்காமை, உடல் அபிவிருத்தி, விவேகம், மகிழ்ச்சி போன்ற பல விடயங்கள் விருத்தியாகும்.

*இந்நூலாசிரியர்.........*



*திரு. ச. அருளானந்தம் அவர்கள் சிறந்த கல்விமான். சிறுகதை எழுத்தாளர்; கவிஞர். சிறுவர்களுக்காக கதைகள், பாடல்கள், நாவல், நாடகம், கட்டுரை, விளையாட்டு என எழுதிக் கொண்டிருப்பவர். ஆடி மகிழ்வோம் என்னும் விளையாட்டு வழிக்கல்வி நூலைத் தந்துள்ளார். முன்பள்ளி ஆசிரியர்களுக்கும்,ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும் மிகப் பொருத்தமான நூல். சிறப்பாகத் தாய்மார்கள் கட்டாயம் படித்து தங்கள் பிள்ளைகளை விளையாட்டுக்களில் ஈடுபடுத்தி வழிகாட்டலாம்.*

*வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலகினை 1998 இல் தொடங்கியது. அந்த அலகின் கல்விப் பணிப்பாளராக திரு. அருளானந்தம் இருந்தார். மாகாணத்தின் முன்பள்ளிகள் 1997 முதல் அமைச்சில் பதிவு செய்யப்படுகின்றன. திருகோணமலை சிறுவர் பாதுகாப்பு அமையம் முன்பள்ளி அபிவிருத்திக்கு உதவ முன்வந்தது. முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க வளவழிகாட்டியை எழுதும்படி 1998இல் செயலாளர் பணிப்புரை விடுத்தார்.*

*கல்விப்பணிப்பாளர் திரு.க.நடராசா அவர்களோடு திரு. ச. அருளானந்தம் இணைந்து வளவழிகாட்டியை எழுதினார். பின்னர் அந்த வளவழிகாட்டி செயற்பாடுகளோடு விரிவாக்கம் பெற்றது. அதனை எழுதும் பங்களிப்போடு தமிழாக்கமும் செய்தார். சிறுவர் பாதுகாப்பு அமையத்தின் அனுசரணையுடன் கொம்பியூட்டர் பிரின்ரர், போட்டோ பிரதி கருவிகளைப் பெற்றார். புன்சிரிப்பு செய்தி மடலை 1999 ஜனவரி தொடக்கம் டிசம்பர் 2000 வரை மாதந்தோறும் வெளியிட்ட பெருமையும் இவரையே சாரும். அவரோடு கடமையாற்றிய அனுபவமே இன்று 'புன்சிரிப்பு' மடலை வெளியிடவும். முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கவும் எனக்கு பேருதவியாக உள்ளது. அவரது அனுபவமே ஆடிமகிழ்வோம் நூலாக வெளிவந்துள்ளது. இந்நூலை வாங்கிப் பயனடையும்படி அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.*

*ஜெயா தம்பையா*

*உதவி கல்விப் பணிப்பாளர்.*

*ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு*

*வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு,*

*திருகோணமலை.*

**ISBN 955 -97106-7-2**